**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.190/2021**

**வழக்கு சாட்சி.L.W.6/P.W.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்துரு | தொழில் | : |
| தந்தை பெயர் | : முருகேசன் | வயது | : |
| கிராமம் | : | தாலுக்கா | : |

வழக்கின் எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2025**

முதல் விசாரணை

1) நான் தற்போது சூரம்பட்டி வலசில் குடியிருந்து கொண்டு பன்றி இறைச்சி கடை வைத்து நடத்தி வருகிறேன்.

2) ஆஜர் எதிரியை தெரியும். எனது கடைக்கு அருகில் எண்ணெய் கடை வைத்து நடத்தி வருகிறார். இவ்வழக்கில் காயம் பட்ட துரைசாமியை எனக்கு தெரியாது. என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வழக்கு குறித்து வேறு எந்த விவரமும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) கடந்த 03.05.2020 ம் தேதி, இரவு 7.30 மணி சுமாருக்கு நானும், எனது தம்பியும் கடையில் இருந்தபோது ஆஜர் எதிரி துரைசாமியை கெட்ட வார்த்தையால் திட்டி, துரைசாமியின் தலையில் கட்டையால் அடித்தும், முதுகில் குத்தியும் சண்டை போட்டாரா என்றால் இல்லை. ஆஜர் எதிரி துரைசாமியை பார்த்து கட்டையை காண்பித்து என்னைக்கிருந்தாலும் இந்த கட்டையால் தான் உனக்கு சாவு என மிரட்டினாரா என்றால் இல்லை. சம்பவத்தை விசாரணை செய்ய தாலுக்கா காவல்நிலையத்திற்கு 05.05.2022 ம் தேதி, மதியம் 1.30 மணிக்கு வந்தபோது, நானும்,

எனது தம்பி இளங்கோவும் சம்பவ இடத்தை அடையாளம் காட்டி அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் கிடந்த ஆஜர் எதிரி விட்டுச் சென்ற கட்டையை என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றிய போது என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. மேற்படி சம்பவத்தை தெரிந்து கொண்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.190/2021**

**வழக்கு சாட்சி.L.W.5/P.W.3**

பெயர் : இளங்கோ தொழில் :

தந்தை பெயர் : முருகேசன் வயது :

கிராமம் : தாலுக்கா :

வழக்கின் எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2025**

முதல் விசாரணை

1) நான் தற்போது சூரம்பட்டி வலசில் குடியிருந்து கொண்டு பன்றி இறைச்சி கடை வைத்து நடத்தி வருகிறேன்.

2) ஆஜர் எதிரியை தெரியும். எனது கடைக்கு அருகில் எண்ணெய் கடை வைத்து நடத்தி வருகிறார். இவ்வழக்கில் காயம் பட்ட துரைசாமியை எனக்கு தெரியாது. என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வழக்கு குறித்து வேறு எந்த விவரமும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) கடந்த 03.05.2020 ம் தேதி, இரவு 7.30 மணி சுமாருக்கு நானும், எனது அண்ணனும் கடையில் இருந்தபோது ஆஜர் எதிரி துரைசாமியை கெட்ட வார்த்தையால் திட்டி, துரைசாமியின் தலையில் கட்டையால் அடித்தும், முதுகில் குத்தியும் சண்டை போட்டாரா என்றால் இல்லை. ஆஜர் எதிரி

துரைசாமியை பார்த்து கட்டையை காண்பித்து என்னைக்கிருந்தாலும் இந்த கட்டையால் தான் உனக்கு சாவு என மிரட்டினாரா என்றால் இல்லை. சம்பவத்தை விசாரணை செய்ய தாலுக்கா காவல்நிலையத்திற்கு 05.05.2022 ம் தேதி, மதியம் 1.30 மணிக்கு வந்தபோது, நானும், எனது அண்ணன் சந்துருவும் சம்பவ இடத்தை அடையாளம் காட்டி அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் கிடந்த ஆஜர் எதிரி விட்டுச் சென்ற கட்டையை என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றிய போது என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. மேற்படி சம்பவத்தை தெரிந்து கொண்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.